# ஒரு மனிதன்



சு.கருணாநிதி

# ஒரு மனிதன்

சு. கருணாநிதி

நல்ல நூல் வெளியீட்டாளர்கள்
79, AV. DES M. DE CHATEAUBRIANT,
93700 DRANCY,
FRANCE.

| | | |
|---|---|---|
| First Edition | : | April 1993 |
| Copy Right | : | Author |
| Title | : | Oru Manithan |
| Author | : | Su. Karunanithi |
| Published by | : | Rajani Publications,<br>79, Av. des M. Chateaubriant,<br>93700 Drancy,<br>France. |
| Printed by | : | Rajani Publications |

எங்களுக்கான
எங்களது
தேசத்துக்காக
எமது நிலத்தை
ஈரமாக்கிச் சென்ற
அனைத்து
தெய்வ ஆத்மாக்களுக்கும்
சமர்ப்பணம்.

# முன்னுரை

*கடிதங்கள் கூட கவிதைகளென மலிந்தன ஒரு காலம்.*
*கவிதை எழுதுவது சுலபமானது எனக் களத்தில் குதித்தோர் கனபேர் !*
*அறுபதுகளின் இறுதியிலும் எழுபதுகளிலும் தமிழில் புதுக்கவிதை வெள்ளம் எனப் புரளத் தொடங்கியது என்பர்.*
*மரபுக்கவிதை வடிக்க ஓரளவு இலக்கண அறிவு, சொல்லாற்றல் தேவைப்பட்டது. ஆனால் இவை தெரிந்தோர் எழுதியதெல்லாம் கவிதையென்றும் கூறிவிடவும் முடியாது தான் !*
*" கொட்டாவி விட்டதெல்லாம் கூறு தமிழ் பாட்டாச்சே.." என இவை சாட்டப்பட்டதுமுண்டு.*
*கவிதை எளிமையாக இருத்தல் வேண்டும். இறுக்கமான தன்மைகள், குறியீடுகள், படிமங்கள், உவமைகள் - வாசகரை மலைப்பிலாழ்த்திவிட்டால் போதும் என்று சில புதுக்கவிதையாளர் நினைக்கின்றனர் போலும் !*
*"விளங்காமல் கவி படைத்தல் சிறந்தது " என நினைக்கும் பண்டிதத்தன்மை, கவிதையுலகில் சிலரைப் பீடித்துள்ளதை அறிய முடிகின்றது.*
*வேறு சிலர் புகழ்பெற்ற கவிஞர்களது பிரதிகளாக உருவாகி வருவதையும் அவதானிக்கமுடிகிறது. புகழ்பெற்ற கவிஞர்களது கவிதைகளின் சில அடிகளை - சொற்களை மாற்றி எழுதுவது; 'அதில் - இதில்' எனச் சிலவற்றைப் பொறுக்கி ஒன்று சேர்த்துக் கவிதையாக்கும் 'திறனுள்ள கவிஞர்களை'யும் புலம் பெயர்ந்த நாடுகளில் காணமுடிகிறது.*

இவர்களுக்கு எவ்வித குறிக்கோள், இலட்சியம், சமுதாய நோக்கு - மக்கள் பார்வை இருப்பதாக யாரும் கூறிவிட முடியாது.
சுயமாக வேறெதுவும் முடியாத நிலையில், 'கவிதை' எழுதிப் புகழ் சேர்க்கத் துணிந்த விளம்பரப் பேராசை தான் காரணமாக இருக்க முடியும்.
வெள்ளமெனப் பாய்ந்து வந்த புதுக்கவிதைகளில் அதிகமானவை நம்பிக்கை வரட்சியும், சோர்வும், விரக்தியும், இருட்டு முனகல்களாகவும் இருந்தன. ஏன் இந்த நிலை ?
'ஒவ்வொரு மனிதனுக்குள்ளும் ஒரு கவிஞன் உறைந்திருக்கின்றான்" என்பது உண்மை தான் ! ஆனால், அவனைத் தட்டி எழுப்பி, மக்களாய்ப் பார்க்க வைத்து, காரியம்சத்துடன் பொருத்திவிட் டாலே 'மக்கள் கவிதை' பிறக்கும்.
பொதுவாக, புதுக்கவிதையாளர்களை நோக்கி வீசப் பட்ட கணைகள் யாவும் ஓய்ந்துவிட்டன. யாப்பறி யாதவர்கள், வளர்ச்சி நிலை புரியாதவர்கள், கவி தையுலகைக் களங்கப்படுத்துபவர்கள், கற்காதவர் கள் என்றெல்லாம் கணை தொடுத்த 'பெருந்தன் மைகள்' பலர் கூட 'கவிதை என்றால் கவிதை தான் ; அதிலென்ன புதியது பழையது ' என்று புது வசனம் பேசத்தலைப்பட்டு நாளாகிறது.
வரலாற்றின் நிர்ப்பந்தமே கவிதையின் போக்காகும் !

கலை இலக்கியங்கள் மக்கள் விடுதலைக்கானவை ! "மக்களே , கலை இலக்கிய மொழி அனைத்துக் கும் சத்தும் சாரமுமாய், வித்தும் வீரியமுமாய் இருக் கின்றார்கள். அவர்களே வரலாற்றையும் படைக்கின் றார்கள்".
"மக்களிடமிருந்து கற்றுக்கொள்கின்றேன் அதனைப் புடமிட்டு மக்களிடம் கொடுக்கிறேன்" என்பார். மக்கள் எழுத்தாளர் கே. டானியல்.
'பாடு பொருளில் எத்தகைய புதுமையுமின்றி பிறர் பாடிய பொருளையே சொற்கள் மாற்றி 'கவிதை' எனச் சுகம் காணும் செக்குமாடுகளாகச் சிலர்

*மாறிவிட்டது வேதனை தருகிறது 'என்கிறார் தமிழக விமர்சகர் ஒருவர் !*

*சமகாலப் பிரச்னைகளை, வாழ்க்கைப் போராட்டங்களை, அவலங்களை, காரணகாரியங்களை தம் அனுபவங்களுக்கூடாகப் பார்த்து நன்கு கவிதை புனைய புலம் பெயர்ந்த கவிஞர்கள் சிலர் முயற்சித்து வருகிறார்கள் என்பது உண்மையே !*

*எண்பதுகளில் எழுதத் தொடங்கியவர் சு. கருணாநிதி.*

*ஈழத்தில் பத்திரிகைகள், சஞ்சிகைககளில் ஆர்வத்துடன் அவர் எழுதுத் தொடங்கியதை யான் நன்கறிவேன். ஈழநிதி, வேலணையூரான் என்ற புனைபெயர்களிலும் கவிதை எழுதி வருகின்றார்.*

*அவரது எழுத்தார்வம், புலம் பெயர்ந்து வந்து வாழ்விடத்தில் 'சொர்க்கமிதுவென' நினைத்துத் திரியும் எம்மவர் சிலரை உறுத்தும் அவரது கவிதை வரிகள்....*

*"எம்மினத்தின் சாம்பரையும்*
*பிணங்களின் நாற்றத்தையும்*
*சாட்சி வைத்தல்லவா*
*நீயந்த வாழ்வைத்*
*தேடியிருக்கிறாய்.....*
*மறந்துவிடாதே.....!*
*அம்மன் கோவில் முகவரிக்குப்*
*பதில் போடவும்...."*

*அம்மன் கோவில் அகதி முகாமில் தஞ்மடைந்து ஜீவனைப் பிடித்துக் கொண்டு இருக்கும் தாய்.மண்ணுக்காக இயன்றளவு பணிபுரியும் தம்பி, வெளிநாட்டுச் 'சொகுசில்' மிதக்கும் அண்ணனுக்கு எழுதும் இந்த வரிகள் இங்கு பல்ருக்கு இடிக்கத் தான் செய்யும் !*

*அந்நிய நாட்டில் வாழ்ந்து கொண்டு, மண்ணை நினைத்து, மக்களை நினைத்து, பெற்றோர், உற்றார், உடன்பிறப்புக்கள், நண்பர்களை நினைத்து ஏக்கத்துடன் தவிக்கும் எம்மவர் வாழ்வையும் அவர் கவிதை வரிகள் சுட்டி நிற்கின்றன.*

*தீண்டாமைக் கொடுமையையும் சாடத் தயங்கவில்லை. இத்தகைய கொடுமைகளையுந் தீர்க்க*

புதிய ஆயுதங்களையுங் கண்டு பிடிக்க வேண்டு மென்கிறார். அல்லது ரஷ்யாவிடம் விண்ணப்பியுங் கள் என்கிறார்.

எந்த ரஷ்யா ?

திரிபுவாதத்தால் சீரழிந்து சிதறுண்டு போய்க் கிடக் கும் இன்றைய ரஷ்யாவிடமா ? இல்லை ! அக்டோ பர் புரட்சி மூலம் அகிலத்தையே கவர்ந்த 'அந்த ரஷ்ய ' வெளிச்சமே சகல கொடுமைகளையும் சாடிட வலுவைக் கொடுக்கக் கூடியது. அந்த ஆயு தங்களைப் பற்றிப் பிடிக்கத் தக்கன எனக் கொள் வது நன்று !

எத்தனை வைத்திய சிகிச்சைகள் மேற்கொண்டும் நாட்டில் பிரச்னை தீரவில்லை ! பாராளுமன்றத்தின் மூலம் பிரச்னைகள் தீர்க்கப்படவில்லை எனவும் நாசூக்காகச் சுட்டிக்காட்டுவதோடு எம்மவரது ஒற்றுமையின்மையையும் குறிப்பிட்டுள்ளார்.

சர்வதேச அகதியாகியுள்ள தமிழரின் வாழ்வை, அவலத்தை எண்ணிக் கலங்கும் வரிகள் கவனத் துக்குரியன.

புலம் பெயர்ந்த நாடுகளில் இன்று அரைத்த மாவையே அரைக்கின்ற 'விளம்பர படைப்பாளி' கள் மலிந்துள்ள வேளையில் சுயத்துவ வீச்சோடும், தன்னம்பிக்கையோடும் கருணாநிதி எழுதி வருவது பாராட்டுக்குரியதே ! சிறுகதைகள் சிலவற்றின் மூலமும் அவர் கவனத்திற்குரியவராகிறார்.

கவிதைகளின் சமுதாயப் பார்வையிலும், எளிமை யிலும், கட்டுக்கோப்பான அமைப்பிலும் இவர் மேலும் கவனஞ்செலுத் குறிப்பிடத்தக்க படைப்பா ளியாக சிறப்புற வேண்டுமென வாழ்த்துகின்றேன்.

**-வி. ரி. இளங்கோவன்**
19.02.93

*19, RUE GASTON CAREE,*
*93300 AUBERVILLIERS,*
*FRANCE.*

# என் உரை

*என் நேச நெஞ்சங்களுக்கு !*
*இது என் தலைப்பிரசவம்*
*அதுவும் சுகப்பிரசவம், காரணம்*
*ரஜனி பதிப்பக 'வைத்தியசாலை'*
*நான் எழுத்தைக் காதலித்து*
*வருடங்கள் பதினாறு*
*வானொலி வழிபோட்டுத் தந்தது*
*குழந்தை பெறும் ஆசை*
*அதன் விளைவே 'ஒரு மனிதன்'*

*கறையான் தின்ற நாவலை*
*வாசிக்க முயல்வது போன்ற வாழ்வில்*
*சமூகச் சிதைவுகளை, சீரழிவுகளை,*
*மரத்தன்மையை, சுத்தல் சுரண்டலை*
*மனிதம் நசிவதை கண்டு வெகுண்டேன்.*
*அவலங்களையும் அனர்த்தங்களையும்*
*கிரகிக்கையில் சீறிப் பாய்ந்தன உணர்வூற்றுக்கள்*
*அவ்வூற்றின் உருவங்கள் அப்பப்போ*
*பிறப்பிட, புகலிட வார, திங்கள்*
*இதழ்களில் வெளிவந்தன.*
*வந்து கொண்டிருக்கின்றன.*

" எண் சாண் உடம்பிற்கு
சென்னி சிறந்தாற் போல்
பொன்சேரிலங்கைக்கு மா யாழ்ப்பாணம்"
தங்கத் தாத்தா சோமசுந்தரப் புலவர்
புகன்றதற்கொப்ப
அந்த ஈழத்தாயின் தலை
எண்ணையின்றி தண்ணியின்றி
சிக்கிச் சுருண்டு நீண்டு திரிசடையாய்
சப்த தீவுகள்....
அந்தந்தத் தீவுகளில் ஒரு தீவில்
தென்கோடியில் செல்விழுந்த
என் வீட்டுச் சுவர் அலுமாரியில்
என் கவிதைகள் பல
செத்துக் கொண்டிருக்கின்றன.
அவற்றிலிருந்து கைக்கு கிட்டியவையும்
நினைவிற்கு எட்டியவையுமாய்
சந்தைக்கு வந்து
காசைத் தொலைத்துவிட்டு
அவலப்பட்டு அங்கலாய்க்கும்
ஒரு நுகர்சியாளனின் தவிப்பும்
புகலிடம் வந்து தாயக நினைவுகளால்
அவலப்படும் ஒரு அகதி ஆத்மாவின்
ராகங்களும், காலத்தால்ப் பிந்தியவையுமாய்
சேர்ந்து ஜனித்திருப்பதுவே இந்த 'ஒரு மனிதன்'

உரிமைக் கணவனை யிழந்த
தாயின் திரிசடையை பிடித்து, இழுத்து
இடுப்பிலும் வயிற்றிலும் தாக்க
அவள் ஓலமிட்டுத் துடிக்க -
ஓலத்தைக் கேட்டும் ஓரத்தில் ஒதுங்கி
ஒரு துரோகியாய் நான் இங்கே....
- இழப்பிற்கும் இறப்பிற்கும் இடையே
நிம்மதியற்ற நிகழ்காலத்தோடும்
நிச்சயமற்ற எதிர்காலத்தோடும்
தான் இருக்கப் போகும் கொப்பை
அறியாத காகமாக

பறந்தோடித் திரிந்து கொண்டிருக்கும்
அவள் பிள்ளைகளின்
சமூக ஆரோக்கியம் கேடுறும்
மரபுவழி மடமைகளையும்
புகலிடத்து இரும்பு மண்ணின்
பழம்பேணிகளையும் (பழமை பேணிகளையும்)
அந்நியப்படுகின்ற சமூக உறவின்
தவிப்பும் சுயாதீன பசப்புகளையும்
பார்த்திருக்க மனம் மறுக்க
சொல்லித் திரிந்த தவையே
மண்ணைத் தேடி நிற்கும் இந்த
'ஒரு மனிதனின்' குருதி அணுக்கள்.
சமுதாயம் நோக்கிய தாக்கத்திலும்
தாற்பரியங்களே மேலோங்கியிருக்கின்றன.
தாற்பரியங்களும் தாக்கத்திற்கு உந்துதல் தான்
சதையைச் சாப்பிட்டுவிட்டு எலும்புகளை
கழுத்தில்க் கட்டிக்கொண்டு திரியும்
விளம்பரதாரர்கள் விளைகின்ற இன்றைகளில்
இலக்கிய இழுக்குகளில்
ஈன்று தந்திருக்கும் இதன் இலக்கு
இக்குழந்தையின் அழகு ? ஆரோக்கியம் ?
அளவு ? உங்கள் கனவளவுகளில்
அளவுகளை, கருத்துக்களைக் காண
காத்திருக்கின்றேன்.
ஈழத்தில் எட்டு நூல்களை வெளியிட்டு
பிரான்ஸ் இல் ஒன்பது நூல்களை வெளியிட்டு
ஐரோப்பாவில் 'வேகவெளியீட்டக' மாகத் திகழும்
ரஜனி பதிப்பகத்திற்கும்
அழகாக, அர்த்தமாக 'ஆடை' செய்ய அணிவித்த தோழமையுள்ள அன்பு நண்பர் அ.தேவதாஸ் அவர் கட்கும் தோழமையுள்ள அன்பு நண்பர் டாக்டர் கவிஞர் வி.ரி.இளங்கோவன் அவர்கட்கும்
ஒத்துழைப்பு நல்கிய ஏனையோருக் கும் என் நன்றிகள் என்றென்றும்.

என்றும்
தோழமையோடும் அன்போடும்

**- சு. கருணாநிதி**

# நன்றி

பாரிஸ் ஈழநாடு
தாயகம்
தமிழன்
தினகரன்
வீரகேசரி
தூண்டில்
சிந்து
அலைஓசை
எரிமலை
ஈழமுரசு
மல்லிகை
ஈழநாடு
சுடர்
ஐரோப்பா முரசு
தாரகை

# ஒரு மனிதன்

என் வீட்டு
முற்றத்து மணலில்
அமர்ந்திருக்க
உனக்கு உரிமையில்லை
என் வீட்டு பூக்களின்
வாசத்தை நுகர
எனக்கு அருகதையில்லை.

என்னுடைய வீடு
என்னுடையதல்ல
என்னுடைய உழைப்பு
என்னுடையதல்ல.

என்னுடையவை
என்னுடையவையல்லாத
என் நிலையில்

நான் ஒரு
உயிர்ப்பிராணி
என்று மட்டும்
நானும்
மற்றவர்களும்
தெரிந்து வைத்திருக்கின்றோம்.

பாரிஸ் ஈழநாடு 1992

## விண்ணப்பியுங்கள்

*வேலிகள் இல்லை தான்*
*ஆனாலும்*
*வாசல்க்கதவுகளுக்கு*
*இரகசிய இலக்க*
*பூட்டுக்கள்....*

*இந்தப் பூட்டுக்களுக்குள்ளே*
*இங்கே*
*கிழுவைமரம் நட்டு*
*கிடுகுவேலி போட்டு*
*உள்ப்பேணி*
*புறப்பேணி*
*யார்பேணி*
*இப்பேணி*
*என்றிதைப் பேணுகின்ற*
*பழம் பேணிகளை*
*இல்லாமல்ச் செய்ய*
*புதிய ஆயுதங்களை*
*கண்டுபிடியுங்கள்.*

*இன்றேல்*
*ரஷ்யாவிடம் விண்ணப்பியுங்கள்*
*ஆயுதம் செய்ய..*

பாரிஸ் ஈழநாடு 1992

# பிள்ளைப் பாக்கியம்

*கருத்தடை*
*கருச்சிதைவு*
*தொடர்ந்தது சில காலம்*

*ரஷ்ய தோட்டத்தில்*
*பூத்த குங்குமப்பூ சாப்பிட்டோம்.*
*பிள்ளை*
*சிவப்பாகப் பிறக்குமென்று,*

*இன்னும் பிள்ளையில்லை.*
*நாட்டு வைத்தியம்,*
*நவீன வைத்தியம்,*
*எத்தனை வைத்தியர்கள்?*
*எத்தனை ஆஸ்பத்திரிகள்?*

*பல தடவை*
*கருச்சிதைவுந்ததனால்*
*'கரு' தங்கும் தகுதியை*
*கருப்பை இழந்திருக்குமோ?*

*கம்பியூட்டர் பரிசோதனையில்*
*கருப்பையில் இல்லையாம்*
*குறைபாடு*

*உயிரணுக்கள்*
*ஒன்றையொன்று மோதி*
*சிதைந்ததனால்*
*இந்திரிய அணுவின்*
*வீரிய விகிதம்...?*

தாயகம் 1992

# சந்தை

கைமாற்று உறவுகள்
கால்மாட்டுப் பூசைகள்
இனத்தின் பெயரால்
இணக்கமில்லாத
பந்தங்கள்...பாசங்கள்..

வாசிக்கத் தெரியாத
வாசமான விலாசங்கள்,
சொல்லத் தெரியாத
சொந்த முகவரிகள்,
இருபத்தைந்திற்கு இறங்கிய
எழுபத்தைந்திற்கு ஏறிய இருபத்தி ஐந்துகள்
பிரசவமாகாமால்ப் போகும்
சிந்தனைக் கருக்கள்,
கலைவின் வேதனைகள்....

தண்ணீரும் கண்ணீர் விடும்
சோக சுயசரிதைகள்
விலைமதிப்புள்ள நிமிடங்கள்
கணக்கு வழக்கு வைக்கும்
காலடிகள்,

அழுகியவை
அழகானவை
ஆரோக்கியமானவை
அனைத்துமுள்ளது.

பாரிஸ் ஈழநாடு 1992

# தேசிய அகதி

*'வதைப்பு'*
*எனது தாய்*
*'இழப்பு'*
*எனது தந்தை.*

*நான் சுவாசிப்பது*
*'நெருப்பு'*
*குடிப்பது*
*'காற்று'*
*புசிப்பது*
*'தண்ணீர்'*

*'உலகம்'*
*எனது வீடு*
*'உயிர்கள்'*
*எனக்கு உடன்பிறப்புகள்.*
*'நாட்கள்'*
*எனது வாரங்கள்*
*ஆகவே வயது....?*

*'மரணம்'*
*எனது தொழில்*
*'ஜனனம்'*
*எனது வருமானம்*
*எனது இயற்பெயர்*
*'தமிழன்'*
*சர்வதேச வழக்கில்*
*எனது பெயர் 'அகதி'.*

தமிழன் 1992

# எங்கெங்கு காணினும்...

'உஷ்...'
மூச்சை மெதுமவாக விடுங்கள்
முன்னுக்கு இருப்பவனுக்கு முட்டாமல்
முட்டினால் காற்றிற்கு
விழுந்து விடும் குத்து.

'மெதுவாக நடவுங்கள்'
வேகமாக நடந்தால்
வேட்டுக்கள் விழுந்துவிடும்.

'பேசாதீர்கள்'
நல்லதைப் பேசினால்..?
'சிரிக்காதீர்கள் !
சினிமாப் பகிடியைத் தவிர
வேறெதற்கும் சிரிக்காதீர்கள்.

'உஷ்...'
மூச்சை மெதுவாக விடுங்கள்
இறுதி மூச்சையும் தான்
பலமாக விட்டால்
வதைபட நேரிடும்.

தினகரன் 1991

# வேரைத் தேடும் விருட்சம்

அக்கரையிலிருந்து
இக்கரைவரும்
அக்கறையால்
அத்தனையையும் அங்கு
அடகு வைத்து
இக்கரை நாடினேன்

மேலைத்தேய இரும்பு மண்ணில்
வேர்விட்ட வேர்விடாத
விருட்சங்களிடையே
நான் இன்னும்
நிழலிட்டு நீரூற்றுகின்ற
வீரிய விருட்சம்தான்.

இக்கரை வந்தும்
அக்கரையின் அக்கறையால்
இக்கரையில் அக்கறையின்றி
வேர்விட ஏனோ
மறுக்கிறது இன்னும்

நெருப்பு மண்ணின்
தாயீரத்தில் தாய்வேர்
தாழ்ந்திருக்கும்போது,
என்றும் இது
வேரைத் தேடும் விருட்சம் தான்.

வீரகேசரி 1991

# திருட்டுப் பிள்ளைகள்

கனவுகளோடு புணர்ந்து
நான் பெற்றெடுத்த
என் கனவுக்குழந்தைகளே
என்
கற்பனைகளைக் குடித்து
நினைவுகளை உண்டு
செல்லமாய்
வளர்கின்ற நீங்கள்

கனவுத்தாய்
கள்ளப்புருசனோடு
ஓடிப்போன பின்பும்
தாயாகவும்,
தந்தையாகவும்
இருக்கும்
இந்தப் பிதாவின்
நிம்மதியை
தயவு செய்து திருடாதீர்கள்.

வீரகேசரி 1991

# புதிய உலகம்

ஆங்காங்கு
மணலினுள்
புதைந்தும்,புதையாமலும்
உக்கியும், உக்காமலும்
மனித எலும்புகளும்
மண்டை ஓடுகளும்.

ஆனால் அங்கு
மனிதர்கள் இல்லை.
மனித இனம்
வாழ்ந்து போனதற்கான
சில தடயங்கள் -
துருப்பிடித்த
கத்தி, கோடரிகள்,
அலவாங்கு, துவக்குகள்,
எவர் சில்வர்ப் பேணிகள்
செம்புகள், குடங்கள்.

- இடையிடையே

கறுப்பு ஓலைகள் கொண்ட
சிவப்பு நிற பனை மரங்கள்
சிவப்பு நீர்கொண்ட
சின்னஞ்சிறு
குளம், குட்டைகள்
பயத்தால் உறைந்து போய்...
காயப்பட்ட காற்று
அழுதுகொண்டு
இயன்றும் இயலாமலும்
வீசிக்கொண்டிருந்தது.
எரிசாம்பர்
காற்றோடு கலந்து -
மேலைத்தேயத்து
வின்ரர் காலத்து
'பனித்துகள்களை'
நினைவுபடுத்த
வளிமண்டலத்திற்கு
நிறமூட்டிக் கொண்டிருந்தது.

என்னைப் போல் இன்னும் பலர்
ஓடி ஒழிந்து கொண்ட
தம் வீட்டு நிலங்களையும்
முகவரிகளையும் தேடி.....

தாயகம் 1991

# உங்களுக்கு எப்போது நேரமிருக்கும்?

ஓடிக்கொண்டு போகும் உங்களை
பின்னே வருபவர்களை கூப்பிடுகிறார்கள்
'ப்ளீஸ் கொஞ்சம் நில்லுங்கள் !'
'ஏன் கூப்பிடுகிறார்கள் ?' என்று
கேட்டுத்தான் செல்லுங்களேன்
யார் அவர்கள்?

ஒவ்வொரு அசைவிலும் சமூகம்
நன்மையடைய வேண்டும் என்ற
அவாவுடைய கவிஞர்கள்
எழுத்தாளர்கள், கலைஞர்கள்.

புத்தகம் எழுதுகிறார்கள்.
"வேலையில்லா வீணர்கள்"
என்று சொல்லி
சினிமா எக்ஸ்பிரஸ் உம்,.
பேசும் படமும் ,திரைச்சித்திராவும்
அழகாய் இருக்குதென்றும்
பிரயோசனம் உண்டென்றும்"
ஓடுகிறீர்கள்.

நாடகம் போடுகிறார்கள்
"அடுத்த ஞாயிறு குஷ்பு வருகிறாள்
இவங்கட நாடகமும், கூத்தும்.."
இகழ்ந்து கொண்டு ஓடுகிறீர்கள்.

புதிதாகச் சொல்லமாட்டார்கள் தான்
புரியக் கூடியமாதிரி சொல்வார்கள்
" சொல்லத் தேவையில்லை
எல்லாமே தெரியும் " என்பீர்கள்.
'ப்ளீஸ் கொஞ்சம் நில்லுங்கள்'

நீங்கள் ஓடிப்போகும்
இடத்திற்குத் தான்
அவர்களும் நடந்து வருகிறார்கள்
உங்கள் ரசனையோடு
எழுதுகிறார்கள், நடிக்கின்றார்கள்
"படிக்கவும், பார்க்கவும் நேரமில்லை"
என்பீர்கள்
என நினைக்கிறேன்.

மெத்றோ படிகளிலும்
றெயினிலும் எழுதினால்ப் படிப்பீர்களா?
அதைப் படிப்பதற்கும்
நேரமில்லை என்பீர்கள்
றெஸ்ரோறன்ற்
கோப்பைகளில் எழுதினால்
படிப்பீர்களா?
பத்ரோன்
அனுமதிக்கமாட்டான்.

பேசும் படத்தில் எழுதினால்
வாங்கமாட்டீர்களாக்கும்...
றூமிற்கு வந்து சொல்ல
உங்கள் விலாசம் தெரியாது
வீதியில் நின்று சொன்னால்
"விசர்" என்பீர்கள்
அப்போ
எப்படிச் சொல்வது
எப்போது
உங்களுக்கு நேரமிருக்கும் ?

தூண்டில் 1990

# என்னைத் தெரியாத நான்

படலையை
அடித்துச்சாத்தி விட்டு
தெருவிலிறங்கி நடந்தேன்
பூவரசம் சருகுகள் கால்களில் மிதிபட
அப்போது வயது இருபத்தி...

என் நாட்டு இராணுவம் விரட்ட
தம்பியும் விரட்ட,
தங்கையும் விரட்ட,
அம்மாவும் விரட்டினா.

மனிதன் வாழும் தேசத்தை விட்டு
மனிதன் வாழாத் தேசத்தின்
கனவுகளோடும், கற்பனைகளோடும்
மனிதத்தைக் காணும் ஆவலோடு
ஆற்றில்ப் போட்டதை
குளத்தில்த் தேடுபவர்களோடு
பாதை தெரியாப் பயணியாய்,
முயன்றும் முடியாதவனாய்,
இயன்றும் இயலாதவனாய்,
புரியாத ஒரு சக்தியின் ஈர்ப்பால்
இன்னும் நடந்து கொண்டிருக்கிறேன்...

வழியில் விழுந்த வாலிபம்
எள்ளி நகைத்தது என்னைப் பார்த்து
கேள்வியும் நானாய் பதிலும் நானாய்
திரும்பிப் பார்க்கிறேன்
வயது முப்பத்தி...முடிந்துவிட்டது

ஏறமுடியாமலும்
இறங்கமுடியாமலும் இடைநடுவில்
வாழ்வில் விமோசனம்...?
அண்மை எது ?... சேய்மை எது ..?
விளங்காமலும் தெரியாமலும் நிற்கின்றேன்.

'எங்கே போகிறேன்?'
'தெரியாது ?
'நான் யார் ?'
தெரியாது
'நான் இன்னும் சின்னக்குழந்தையா ?'
' அதுவும் தெரியாது'.

சிந்து 1989

## நெஞ்சம்

நிதமுமாயிரம்
நினைவு மலர்கள்
மலர்கின்றன.

நிகழ்வுக்காய்
காய்க்காமல்
போலிப்பூவாக
கனவுக் காம்புடன்
அவை வாடி விழ
காம்புகள் கழன்ற
தழும்புகளின்
வேதனையால்
விரக்தி மண்ணில்
வீழ்ந்து மடியும்
பூ மரம்.

வீரகேசரி 1980

# வலயம்

*புதுப்புது சொற்களையும்*
*புதுப்புது அர்த்தங்களையும்*
*நாளும் நாம்*
*கண்டு பிடித்துக் கொண்டிருக்கிறோம்*
*முன்னவர் கண்ட*
*ஈரவலயம்*
*வெப்பவலயம்*
*கண்காணிப்பு வலயம்*
*இன்னும் பலதுடன்*
*கடைசியாக*
*நாம் கண்டுபிடித்திருப்பது*
*'சீதன வலயம்'.*

*நகரத்திலிருந்து*
*நெடுந் தூரத்திலிருந்து*
*கிராமங்களில்*
*உள்ளூர்ச் சம்மந்தங்களில்*
*வீடுவளவு*
*சீதனமாய்க் கேட்கிறார்கள்*
*நடு நரகத்திலிருந்து*
*ஒரு கிலோ மீட்டர்*
*சுற்றளவிற்குள்*

*எமது கண்டுபிடிப்பில்*
*இந்தப் பிரதேசம்*
*'சீதனவலயம்'*

அலைஓசை 1989

# ஒரு தம்பியிடமிருந்து...

அருமை அண்ணனுக்கு
நீண்டகாலமாக ஏன்
கடிதம் போடவில்லை, காசனுப்பவில்லை.
வேலிகளை
பிய்த்துக் கொண்டு ஓடினாய்
இப்போது
மதில்களையுமல்லவா உடைத்துவிட்டாய்.

அதோ...
அம்மா
அம்மன் கோவில் அகதி முகாமில்
குஞ்சியம்மா
அன்னம்மாள் தேவாலயத்தில்
நாதன் அண்ணனின் பிணம்
நாகராசாவின் வாழைத்தோட்டத்தில்
இன்னும்
நாறிக்கொண்டே கிடக்குதாம்
இளையத்தையின் மகள்
முப்பத்தி ஐந்தைத் தாண்டியும்
இன்னும் வாழாவெட்டியாக...

இக்கடிதம் எழுதுவது
எனக்காகவல்ல.
அம்மாவுக்காக
இங்கே வாழுகின்ற
எல்லா
அம்மாக்கள் சார்பிலுமே
எழுதுகிறேன் இதை

அடிமைத்தனத்தை அகற்றும்
இலட்சியத்துக்காக
துயிலாமல் அயிலாமல்
காட்டிலும் மேட்டிலும்
கங்குல் பகலெல்லாம்
தேசத்துக் கோடியில்
அலைகின்றேன்.
நீயோ
இலட்சங்களைக் கோடியாக்க
அந்நிய தெருக்களில்
அடிமையாய் அலைகின்றாய்
உனது பக்கம்
அது நியாயமானதே
காரோடும், வீட்டோடும்
வாழுகின்ற உன்
வசதியிலும் வளத்திலும்
எங்களுக்கு உரிமையுண்டு.

எம்மினத்தின் சாம்பரையும்
பிணங்களின் நாற்றத்தையும்
சாட்சி வைத்ததல்லவா
நீயந்த வாழ்வைத்
தேடியிருக்கின்றாய்
மறந்துவிடாதே
அம்மன் கோவில் முகவரிக்கு
பதில் போடவும்.

எரிமலை 1989

# ஓ.. மைதிலி!

*துப்பாக்கியர்களின்
துப்பாக்கிகளின்
தோட்டாக்களை
விழுங்கிவிட்டு
கள்ளி முள்ளிப் புதர்களின் மேல்
இன்னும்
குற்றுயிராகவே கிடக்கின்றேன்.*

*ஓ...மைதிலி !
உன் மடியில்த்தவழும்
என் மழலை மதனை
தெரு மயானத்தில்
நன்றாக விளையாட விடு.*

*தெரு மயானத்து
சாம்பரில் அமர்ந்திருந்து
மனித எலும்புகளோடு விளையாடி
வெற்றுத் தோட்டாக்களை
எச்சில்ப்படுத்துவான்.
அந்த வெற்றுத் தோட்டாக்களின்
நச்சு இரசாயனங்கள்
அவனுதிரத்தில் கலக்கும்.*

*அப்படிக் கலக்குமாயின்
என்னை அழித்த
அந்தத் துப்பாக்கிகளால்
அவனை
அழிக்கமுடியாமல்ப் போகும்.*

*கவனமாக வளர்த்து
அவனைப் பெரியவனாக்கு.
அவன் வளர்ந்து
வயல் உழுவான்
உழுதுவரும் சாலினூடே
மனித எலும்புகள்
இரும்பாகி
கலப்பையில்த் தட்டும்
அவ்விரும்பெடுத்து
துப்பாக்கி செய்து
இடரழிப்பான்.*

ஈழமுரசு 1986

## முதலாளிகள்

தொழிலாளிகளின்
அபிலாசைகளை
அடகு வைத்து
தேவைகளை
ஈடுவைத்து
உணர்ச்சிகளை
பலியிட்டு
மனச்சாட்சியை
விற்று
வயிறு வளர்க்கும்
இரவலர்கள்.

- மல்லிகை 1984

## மானிட குழாமே

நிறம் கண்டு,
மதம் கண்டு,
தொழில் கண்டு,
சூழல் கண்டு,
பிரதேசம் கண்டு,
ஜாதி காணும்
உழுத்த
மானுட குழாமே..!

மனித மனம் கண்டு
ஜாதி காணும்
நிலை கொண்டு வாழ
பழகுங்கள்.

வீரகேசரி 1982

# ஒத்திகை

நான்
'அகதி முகாம்' என்ற
பல்கலைக்கழகத்தில்
அதிகம் படித்த
'அகதி' என
பட்டம் பெற்ற
பட்டதாரி.
இராணுவ முகாமிலும்
குறுகிய காலப் பயிற்சியை
முடித்து
'பயங்கரவாதி' என
பட்டம் பெற்ற
சிறப்புப் பட்டதாரி.
மரணத்திற்கான
ஒத்திகைகளை
முடித்துவிட்டு
மரண அரங்கேற்றத்திற்கான
அனுமதிக்காக
புவியிலிருந்து
வெளியேறும் வாசலில்
காத்திருக்கிறேன்.

ஈழநாடு 1984

## 'எயர் கொண்டிஷன்

*செத்த பின் நாளை*
*யாருமற்ற அநாதை*
*பிணங்களாய்*
*நாட்கணக்கில்*
*'ஐஸ்' இல்*
*வைப்பதற்காய்-*
*சுரண்டிப் பிழைத்த*
*முதலாளிகள்*
*உடம்பை*
*குளிரில் வைத்து*
*இசைவாக்கத்திற்குட்படுத்த*
*முன்னெச்சரிக்கையாக*
*அமைக்கப்பட்ட சாதனம்.*

\- வீரகேசரி 1987

## அபிவிருத்தி

*நேரியதை*
*தலைகீழாய்*
*மாற்றுவதும்,*
*பின்னதை*
*வளைப்பதுவும்*
*நிமிர்த்துவதும்*
*சரியானதைப்*
*பிழையாக்கி,*
*நல்லதை*
*கெடுப்பதும்*
*எடுத்துக் காட்டாம்*
*முற்போக்காம்*
*அபிவிருத்தியாம்.*

சுடர் 1979

**மனம் மறுக்கும் பார்த்திருக்க**

நல்லூரில் தேர் என்றால்
'நூரன்பேர்க்' இல் வடம் பிடிப்பர்
கானலை நீர் என்றால்
ஆமென்பர் காசென்றால்.
பேயைப் பின்தொடர்ந்து
சேயைப் பலி கொடுப்பர்.
அடுத்தவன் ஜாதகத்தில்
தம்பலனைப் பார்ப்பர்.
தகைவிலார் எல்லாம்
தகையுடையவராகி தமையிழப்பர்.

சென்னையிலே கவுண்டமணிக்கு
காய்ச்சல் என்றால்
'சென்டெனிஸ்' இல் மருந்தெடுப்பர்
குளிக்காமல் இருக்கின்றாள்
குஷ்பு எனில் இங்கு
களிப்பின்றிக் கவலை கொள்வர்.
நீயும் பத்து நானும் பத்து
இரண்டையும் கூட்டி
இரண்டால் வகுத்து
விடைசொல்வர்.

கலாச்சாரம் பண்பென்று
கால்மாறித் தலைமாறி
கூட்டங்கள் போட்டு
கூவிப்பிதற்றி காவல் நிற்பர்
கண்ணில்லாக் காவலர்கள்.
தேம்ஸ், செயின், றெயின்
நதியோரங்களில் நின்று
ஆராய்ச்சி செய்வர்.
சிந்து நதியோர நாகரீகம் பற்றி.

வேதமோத சாத்தான்கள்
இசைவாக சாத்திரங்கள்
துதிசெய்ய தேவாரங்கள்
மனம் மறுக்கும் பார்த்திருக்க.

## இது வாழ்க்கையல்ல

இரும்பு மண்ணும்
இயந்திர வாழ்வும்
விரும்பியா பெற்றோம் ?
விரும்பியும் விரும்பாமலும்,
விளங்கியும் விளங்காமலும்,
வார்த்தைக்கு சுவையானவை
வாழ்க்கைக்கு சுமையாக
வரிந்து கொண்ட
உறவிது.

போராடி நாள் போக்கும்
புறம் போக்கு ஜீவியம்
நெய்து நெருடுகின்ற
தாயகத்து நினைவுகளை
இருட்டு நெஞ்சிற்குள்
தேக்கி குமைந்து கொண்டு
'வீடு - வேலை' என்ற
நேர்கோட்டில் போகும்
'றிமோட் கொன்றோல்'
இயக்கம்.

பாதையில்லாப் பயணிகளாய்...
கூட்டிக் கழித்து
பெருக்கிப் பிரித்து
சுயமிழந்து, சுகமிழந்து
இதுக்குத் தான்
இவ்வவளவு தான்,
இப்படித்தான்
வரைமுறை வகுத்து
நாட்களை நகர்த்தும்
இவ்வியங்கு நிலை
வாழ்க்கையல்ல....
நிர்ப்பந்தங்களினால்
செய்து கொள்ளப்பட்ட
வரைமுறையில்லாத
ஒப்பந்தம்.

ஐரோப்பா முரசு 1992

# விசித்திரமான தலைமுறை

தமிழ்ப்பிள்ளையாயிருக்குமோ..?
தமிழிலில்க் கேட்டேன்
தழுதழுத்துச் சொன்ன பதிலில்
தேங்கிக் கிடந்தன
சில தமிழ்ச் சொற்கள்.

'டொச்'இல்க் கேட்டேன்
சொல்லத் தொடங்கியது.
முடிக்கத் தெரியவில்லை
'பிரெஞ்' இல்க் கேட்டேன்
புரண்டது நா
எதுவும் விளங்கவில்லை.
'ஆங்கிலத்தில்'க் கேட்டேன்
அபிநயத்தோடு சொன்னது
பரதநாட்டியத்தோடு சொன்னதால்
புரிந்து கொண்டேன் ஓரளவு.
பெயர் 'ரெறிகுமார்'
ஒன்று மட்டும் உறுதி
நிச்சயமா இது
வெள்ளைக்காரப் பிள்ளையல்ல...

ஒரு தேசத்தின்
விலைமதிக்க முடியாத சொத்து
குழந்தைகள் என தெரிந்தும்
மானுடவியலாளர்களினதும்
வரலாற்றாய்வாளர்களினதும்
ஆய்விற்கு
விசித்திரமான ஒரு தலைமுறையை
விளைவித்துக் கொண்டிருக்கின்றோம்.

வீரகேசரி 1991

## நாய்க்கு ஒருகடிதம்

பிரியமுள்ள லக்கி !
பிரியமில்லையா உனக்கு
இங்குவர ?
ஏன் அடம்பிடிக்கிறாய்
வரமாட்டேன் என்று.
சொந்த மண்ணில்
சுகமுண்டு வாழ்வதில்
நானறிவேன்.
இருந்தும் நிலைமை ..?

தீனி போடுபவர் பின்னால்
நீயேன் அலைகின்றாய்
தெருத்தெருவாய்.
சொறி
வீடில்லை
வீட்டு ஆளில்லை
என்றால்
அலையத்தானே வேண்டும்.

அப்பாவும் போனமாதம்
அக்காவிடம் வந்துவிட்டார்
லண்டனுக்கு.
அம்மா கனடாவில்
தம்பியிடம்
தங்கை சுவிஸ் இல்
வாற மாதம் அண்ணன்
வாங்கப் போகிறார்.

வீடு இங்கு
தேசத்தை ஈடுவைத்து
நிம்மதியை இழந்து
நித்திரையை விற்று
உடம்பைக் கரைத்து
சில்லறையாய் சேர்த்து
வீடு வாங்கி நான்
மாதங்கள் இரண்டு
ஆகிவிட்டன.
வந்தால் நீயிங்குவாழ
வசதியாய் தனியறையுண்டு.
நம் வீட்டு அங்கத்தவர்களில்
நீ மட்டும் தான் பாக்கி
விசா அலுவல்களை
விரைவாச் செய்கிறேன்
புறப்படு உடனே.
நாடு எரிகின்றதா ?
மக்கள் மடிகின்றனரா ?
எரியமட்டும் மடியட்டும்
நீ மட்டும் வந்துவிடு.

முன்பு நான்
பிரபல்யமற்ற.....வாதி
இப்போது
இங்கு மிகப் பிரபல்யம்
கலியாணவீட்டில்
மணமக்களைப் பற்றியும்
பேர்த்டே பார்ட்டியில்
பிள்ளையைப் பற்றியும்
சாமத்திய வீட்டில்
அப்பிள்ளை பற்றியும்
குடிபுகலில் வீடு பற்றியும்
துடக்குக் கழிவில்
தாய்மை பற்றியும் பேச
என்னை அழைக்கின்றார்கள்.
என் பிரபல்யத்தைக் கண்டு
நீ பிரமிப்பாய்
தாமதிக்காமல் வந்துவிடு
தவிர கிடைத்ததும்
இக்கடிதம்
முயற்சியில் இறங்கு.
கொழும்பு வந்து நீ
கொடுக்கும் தகவலுக்காய்
காத்திருப்பேன் ஆவலோடு
இப்படிக்கு
பிரியமுள்ள
எஜமான்
ப.ப
**- 1993**

## பணம்

ஏழை மக்களுக்கு
பசிப்பிணியோட்டும்
பரம்பொருள்.

நடுத்தர வர்க்கத்திற்கு
வாழ்க்கை வண்டியை
ஓட்டும் சாரதி.

முதலாளி வர்க்கத்திற்கு
அவர் தம்
பசப்புகளையும்
பம்மாத்துகளையும்
போலிகளையும்
மூடி மறைக்கும்
போர்வைப் பொருள்.


தாரகை 1984

## விற்பனையாகும்
## ரஜனி பதிப்பக வெளியீடுகள்

* "சிகரம்" (கவிதை) -**வி.ரி.இளங்கோவன்**
* "ஊரடங்கப்பாடல்கள்" (கவிதை)-**தான்தோன்றிக்கவிராயர்**
* "விடிவை நோக்கி.." (கவிதை)-**வண்ணை தெய்வம்**
* " கடலில் ஒரு படகு" (நாவல்)-**"காசி" வி.நாகலிங்கம்**

## விரைவில் வெளிவருகிறது

* இனப்பிரச்னை ஒரு உலக வலம் (கட்டுரை)
  -**பேராசிரியர் வி.ரி.தமிழ்மாறன்**
* விதை மட்டுமல்ல விளை நிலமுந்தான் (நாவல்)
  -**கீழ்கரவை பொன்னையன்**



கருத்து
உருகி, கொதித்து,
பிரவாகித்து
ஓடுகின்ற நிலை
'கவிதை'

அதில்
இறங்கி நீராடி
எழுகின்ற நிலை
'அழகு'

அதைப்புரிந்து
புகல்தல் பிறர்க்கு,
உணர்தல்.